**Principal District Munsif Court, Sankarankovil.**

தேதி : 19.09.2022
EA 8/2013 in EP NO.20/2012
ம..சா.1 சின்னத்துரை
<u>ம.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :–

நான் தாக்கல் செய்துள்ள மேல்முறையீடு வழக்கு எண்.16/2016 எனக்கு விரோதமான பிறகு அதற்கு எதிராக நான் மேல்முறையிடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் நான் இந்த மனுவில் பரிகாரம் தேடிக்கொள்கிறேன். வழக்கு எண் O.S.No.6/2011 டிகிரிக்கு எதிராக பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்கு பதிலாகதான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். ரத்தினம் எடுத்த கிரையத்தை உறுதிப்படுத்தக்கூடாது என தனி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவின் எண் ஞாபகமில்லை. அப்படி எந்த மனுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மனுவில் வழக்கு எண். 377/2010, மற்றும் 380/2010 ல் பற்றி கூறியுள்ளேன் அதைப்பற்றி தெரியுமா என்றால் எனக்கு ஞாபமில்லை. மேற்சொன்ன பிராது மற்றும் தீரப்புரை பற்றி தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். O.S.No.377/2010 மற்றும் 380/2010 வழக்கை 1ம் எதிர்மனுதாரர் ரத்தினம் கட்சிதாரர் இல்லை என்றால் சரிதான். நான் சுரேஷ் என்பவருக்கு எதிராக தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள மனு சட்டத்திற்கு புறம்பாக தாக்கல் செய்துள்ளேன். எனவே செல்லத்தக்கதில்லை என்றால் சரியல்ல. நான் Sec 47 Civil procedure code படி தான் மனு தாக்கல் செய்திருக்கவேண்டும் அவ்வாறு மனு தாக்கல் செய்யாமல் இம்மனு Or21 R97,98,99 Civil producure code படி தாக்கல் செய்துள்ளது

செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் தீர்ப்பின் பலனை அனுபவிக்ககூடாது என்று இந்த வம்பு மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் தாக்கல் செய்துள்ள மனு இந்த 1ம் எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்கள் எல்லாம் எனது பெயரில் 07.10.2010 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் தான் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாற்றம் செய்ததற்ககான உத்தரவு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு அந்த உத்தரவை தாக்கல் செய்திருந்தால் யார் யாரை விசாரித்திருப்பார்பள் என்ற விபரம் தெரிந்திருக்கும் என்றால் சரிதான். பட்டா மாற்றம் செய்யும் போது 1ம்எதிர்மனுதாரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அப்போது 1ம் எதிர்மனுதாரர் கிரையம் பெறவில்லை. பட்டா மாற்றம் எல்லாம் 1ம் எதிர்மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**